**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**OS. No. 286/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tr.Durairaj Junior Assistant in accordance with the provisions of Act X of 1873 on 24.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name | Balaji | Religion | Hindu |
| Father Name | C.K.Kasthuri | Age | |
| Village | | Calling | |
| Taluk | | | **PW1** |

**Cross**

1. நான் பிரதிவாதி அனந்த லட்சுமிக்கு பதிலாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிதான். அனந்த லக்ஷ்மி பவர் கொடுத்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அந்த ஆவணம் அவர் கையப்பமிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் ஆனந்த லட்சுமிக்கு பதிலாக சாட்சியம் அளிக்கிறேன் ஆனந்த லட்சுமி மீண்டும் சாட்சி அளிக்க வர மாட்டார். தா.வா. சொத்தின் விவரம் எனக்கு தெரியும். தா.வா. சொத்தின் மனை எண்.1622 என்றால் சரியல்ல தவறு தா.வா. சொத்தின் மனை எண்.1620. இந்த தா.வா சொத்து எனது மனைவியின் தாயாருக்கு அவரது தாயார் 1960 காலங்களில் வாங்கி அளிக்கப்பட்ட சொத்தாகும்.

2. தா.வா சொத்து ராம் நகர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். பழைய கட்ட காரன் தாலுக் என்றால் சரிதான். எனது மனை எண்.1620 மொத்தம் பரப்பளவு 4,800 சதுர அடி ஆகும். அது இரண்டு நபர்கள் பெயரில் உள்ளது ஆனால் தற்பொழுது நான் ஒரு நபர் எதிராக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் தாக்கல் செய்த பிரமாண

வாக்குமூலம் நான் சொல்லி தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார் அதில் உள்ள விவரம் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்கு மூலத்தில் வாதியின் மனை எண்.1622 என்றும் என்னுடைய மனை எண்.1620 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் தாக்கல் செய்த எனது முதல் பிரமாணம் வாக்கு மூலத்தில் பத்தி 8-ல் ஆவண எண் 1713/1992 ஆகிய ஆவணங்களில் வாதி பத்தி 2 மற்றும் 3 வாதியாக சுயமாக திருத்தம் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாசா ஆ 2 என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் நான் சொல்லி வர திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதா என்றால் பழைய ஆவணம் என்பதால் என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை. 20.05.2012 அன்று வருவாய் துறையினர் நில அளவருடன் உதவியுடன் தாவா சொத்தை அளந்து பார்த்தார்களா என்றால் அளந்து பார்த்தார்கள். அந்த இடத்தை இரண்டு மூன்று முறை அளந்தார்கள் அதனால் வாதி அப்பொழுது இருந்தாரா என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

4. எனது முதன்மை பிரமாணம் வாக்குமூலத்தில் பேரா 7-ல் கீழிருந்து 4-வது வரியில் நான் தாவா சொத்தை அளந்து பார்க்கும் பொழுது என்னுடன் வாதியும் இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் வாதியும் உடன் இருந்தார். சாட்சி மீண்டும் எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சி சாட்சியமளித்தார். வாதிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாக சாட்சியமளித்தார்.

5. 31.05.2012 அன்று தா.வா சொத்தை அளந்து பார்த்தபொழுது வாதி உடன் இருந்தார் என்று சொல்கிறேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. தா.வா சொத்து இன்று வரை காலி மனை என்றால் சரிதான். இது சம்பந்தமாக

வருவாய்த்துறையினருக்கு மனு கொடுத்தேனா என்றால் வருவாய்த்துறையினர் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் காவல் துறையினர் அனைவருக்கும் மனு கொடுத்துள்ளேன்.

**Sd/- M.N. Rajanandhivarmasiva,**
**District Munsif cum**
**Judicial Magistrate,**
**Sholinganallur.**